**நுகர்வோர் என்பவர் யார்?**

பொருட்களையோ அல்லது சேவைகளையோ – விலை கொடுத்தோ, வாக்குறுதி கொடுத்தோ வாங்குபவரை நுகர்வோர் என்கிறோம்.

வணிக மற்றும் வியாபார நோக்குடன் ஒரு பொருளினை அல்லது சேவையினை பணம் செலுத்தி பெறுபவர் நுகர்வோர் ஆகமாட்டார். ஆனால் சிறு வியாபாரத்தை மட்டுமே
நம்பி பொருட்கள் வாங்கி விற்று பிழைப்பு நடத்துபவர் நுகர்வோர் ஆகிறார்.

**நுகர்வோர் உரிமைகள் யாவை?**

**பாதுகாப்பு உரிமை**

உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட்கள், உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் சேவைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை.

**தகவல் பெறும் உரிமை**

ஏமாற்றும் மற்றும் தவறான தூண்டுதலில் இருந்தும் தம்மை பாதுகாத்துக் கொள்ள, தானாகவே, அறிவுபூர்வமாக முடிவு எடுக்க உதவும் உரிமை.

**தேர்ந்தெடுக்கும் உரிமை**

தனக்குத் தேவையான பொருள் அல்லது சேவைகளை சுதந்திரமாக தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை.

**முறையிடும் உரிமை**

தன்னுடைய கருத்துக்களையும், குறைகளையும் தக்க இடத்தில் எடுத்துரைக்க, எளிதில் அணுகக்கூடிய உரிமை.

**குறைதீர்க்கும் உரிமை.**

தரமற்ற பொருட்கள் திருப்தியற்ற சேவைகள் காரணமாக ஏற்படும் இழப்புகளுக்கு நியாயமாக நஷ்ட ஈடு பொறுவதற்கான உரிமை.

**நுகர்வோர் கல்விக்கான உரிமை**

விழிப்படைந்த நுகர்வோராக இருப்பதற்கு தேவையான அறிவையும், திறமையையும் பெறும் உாமை.

**தூய்மையான நலம் பயக்கும் சுற்றுச்சூழலுக்கான உரிமை**

வாழக்கைத் தரத்தை மேம்படுத்தும் துய்மையான நலம் பயக்கும் சுற்றுச் சூழலுக்கான உரிமை.

**அடிப்படை தேவைகளுக்கான உரிமை**

உணவு, உடை, இருப்பிடம், உடல்நலப் பாதுகாப்பு, கழிவு நீர் அகற்றுதல் ஆகிய முக்கிய அடிப்படை பொருட்கள் மற்றும் சேவைகள் அனைத்தையும் எளிதில் அணுகக்கூடிய உரிமை.

**நுகர்வோர் கடமைகள் யாவை?**

விழிப்புணர்வோடு இருந்தல் ஈடுபாட்டுடன் இருத்தல் தேவைக்கு அதிகமான நுகர்வை தவிர்த்தல் தவறு செய்யும் உற்பத்தியாளாகள்-வணிகர்கள் பற்றி புகார் செய்தல் பொருட்களையும் சேவைகளையும் முறையாக பயன்படுத்தல் சுற்றுச்சூழல் குறித்து பொறுப்புணர்ச்சி கூட்டு முயற்சி

அங்காடிக்குச் செல்வதற்கு முன்பு தேவையை பட்டியலிட வேணடும் பொருட்களின் ரகங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேணடும்.

விற்பனையாளர்களின் வற்புறுத்தலை எதிர்க்க வேண்டும்.

ரசீதுகள், உத்திரவாதங்கள், தகவல் அறிக்கைகள் அனைத்தையும் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பிரச்சனை என்று வந்த உடனேயே அதனை விற்பனையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

உத்திரவாத அட்டையில் விற்பனையாளரின் முத்திரை மற்றும் கையொப்பத்தைப் பெற வேண்டும்.

பொருட்களுக்காக வாழாமல், வாழ்க்கைக்குத் தேவையான பொருள் மட்டும் வாங்க வேண்டும்.

**நுகர்வோர் உரிமையை பாதுகாக்க ஏதேனும் சட்டம் உள்ளதா?**

ஆம், நுகர்வோர் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் / மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தன் சிறப்பு அம்சங்கள் யாவை?**

ஏளிய வழக்காடு முறைகள்

வழக்கறிஞர் தேவையில்லை

நாமே வாதிடலாம்

பதிவு தபாலில் புகாரை அனுப்பலாம்

பதிவு செய்யப்பட்ட நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோர்கள் சார்பில் புகார்களை அளித்து வழக்கு தொடுக்கலாம்.

## பொது விநியோக திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடி மக்களுக்கும் குறிப்பாக, ஏழை எளிய மக்களுக்கு உணவு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, மாதந்தோறும் இன்றியமையாப் பொருட்களை நல்ல தரத்தோடும், மக்கள் பெற இயலக்கூடிய. விலையிலும் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே நியாய விலைக் கடைகள் வாயிலாக விநியோகம் செய்வதே பொதுவிநியோககத்தின் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**அ)உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் செயல்பாடுகள்:**

உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் தலைமை அலுவலகம் சென்னை சேப்பாக்கம், எழிலகம் 4வது மாடியில் அரசால் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகனை கவனிக்க கீழ்காணும் முன்று பிரிவுகளை கொண்டு செயல்படுத்தி வருகிறது.

1. பொதுவிநியோக திட்ட பிரிவு
2. நுகர்வோர் பாதுகாப்பு பிரிவு
3. விலைகண்காணிப்பு குழு

**ஆ) குடும்ப அட்டைகளின் வகைகள் மற்றும் தகுதியான அத்தியாவசியப் பொருட்களின் விபரம்**

1. குடும்ப அட்டைகளின் வகைகள் (விருப்பங்களின் அடிப்படையில்)

- **ஆனைத்து அத்தியாவசிய பொருள்கள் குடும்ப அட்டைகள்** (பச்சை நிற அட்டைகள்) அரிசி மற்றும் இதர இன்றியமையாப் பொருட்கள் பெற விருப்பம் தெரிவித்தவர்களுக்கு பச்சை நிற குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன.
- **சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகள்** (வெள்ளை நிற குடும்ப அட்டைகள்) அரிசிக்கு பதிலாக சர்க்கரை பெற விருப்பம் தெரிவித்தவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு அரிசி தவிர இதர அத்தியாவசியப் பொருளுடன் அரிசிக்கு பதிலாக 3 கிலோ கூடுதல் சர்க்கரை வழங்கப்படுகிறது.
- **'ஏந்த பொருளும் பெற விருப்பமில்லை' என்ற குடும்ப அட்டைகள்** (வெள்ளை நிறம்):
  பொதுவிநியோக திட்டத்தின் கீழ் எந்தபொருளும் தேவையில்லை என விருப்பம் தெரிவித்தவர்களுக்கு 'எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன.
- **காவலர் அட்டைகள்:** காவல் ஆய்வாளர் பதவிக்கு இணையான அனைத்து காவல் அதிகாரிகள் மற்றும் அவர்கள் கீழ் பணியாற்றும் காவலர்களுக்கு காவலர் அட்டைகள் (காக்கி நிறம்) வழங்கப்படுகின்றன.
- **வனக்காவலர் அட்டைகள்:** வன காவல் ஆய்வாளர் பதவிக்கு இணையான அனைத்து வன காவல் அதிகாரிகள் மற்றும் அவர்கள் கீழ் பணியாற்றும் வன காவலர்களுக்கு காவலர் அட்டைகள் (நீல நிறம்) வழங்கப்படுகின்றன.

2. புதிய குடும்ப அட்டை பெறுவதற்கு தகுதி மற்றும் விண்ணப்பிக்கும் முறை

**1.அ) புதிய குடும்ப அட்டை பெறுவதற்கு நடைமுறைகள் வருமாறு :-**

விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்பம் இந்திய குடியுரிமை பெற்றவராக இருத்தல் வேண்டும்

- விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்பம் தனி சமையலறையுடன் தனியாக வசிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவருடைய குடும்பம் தமிழகத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரா் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினா்கள் எவரும் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் குடும்ப அட்டை வைத்திருக்ககூடாது.
- விண்ணப்பதாரா் பெயரோ அவருடைய குடும்ப உறுப்பினா் பெயரோ தமிழ்நாட்டில் வேறு எந்த குடும்ப அட்டையிலும் இடம் பெற்றிருக்ககூடாது.
- விண்ணப்பதாரா் மற்றும் குடும்ப உறுப்பினா்கள் அவருடைய நெங்கிய உறவினராக இருத்தல் வேண்டும். குடும்ப தலைவருக்கு உறவினரல்லாத நபா்களின் பெயா்களை குடும்ப அட்டையில் சோ்க்க இயலாது.
- தமிழக அரசு புதிய குடும்ப அட்டைக்கான விண்ணப்பப்படிவங்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் வரையறை செய்துள்ளது. இப்படிவம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்புத் துரையின் இணையதளம் www.consumer.tn.gov.in –ல் உள்ளது.
- சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை இணைப்பு ஆவணங்களுடன் அவா் வசிக்கும் பகுதிக்கு உரிய உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்புத் துறை உதவி ஆணையாளா் (மண்டல) அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரா் அவா் வசிக்கும் பகுதி எந்த உதவி ஆணையாளா் அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது என்பது தொடா்பாக சந்தேகம் எழுந்தால தொலைபேசி மூலம் இந்த அலுவலகங்களை தொடா்பு கொள்ளலாம். சென்னை தவிர பிற மாவட்டங்களுக்கு விண்ணப்பதாரா் வசிக்கும் பகுதியைச் சாா்ந்த வட்ட வழங்கல் அலுவலா் (கோயம்புத்தூா் மாநகரம் பொறுத்த மட்டும்) உதவி பங்கீட்டு அலுவலா், குடும்ப அட்டை பெறுவதற்கான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ள தகுதியுடைய அலுவலா்கள் ஆவா்.
- விண்ணப்பதாரா்கள் விண்ணப்பங்களை சமா்ப்பிக்கும் பொது சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளா் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகத்தில் ஒப்புகை சீட்டினை பெற்றுக் கொள்ளுமாறு கோட்டுக் கொள்ளப்படுவதுடன், ஒப்புகை சீட்டில் பதிவு எண், விண்ணப்பதாரரின் பெயா் / முகவரி மற்றும் விண்ணப்பம் அளித்த நாள் ஆகிய விவரங்களை ஒப்புகை சீட்டில் இடம் பெற்றுள்ளதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

  உதவி ஆணையாளா் அல்வது வட்ட வழங்கல் அலுவலா் ஒப்புகை சீட்டு வழங்கவில்லை எனில் அதனை உடனடியாக 044-28592828 என்ற தொலைபேசி அல்லது consumer@tn.gov.in என்ற மின்அஞ்சல் முகவரிக்கோ உடன் தெரியப்படுத்தலாம்.

- விண்ணப்பதாரா்கள் தனது விண்ணப்பத்தினை அஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம்.
  இருந்தபோதிலும் விண்ணப்பம் சென்றடைந்ததை உறுதி செய்து கொள்ள ஆதாரமாக ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைப்பது நல்லது.

  உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்புத்துறை கூடியவிரைவில் ஆன்லைனில் நேரடி விண்ணப்பம் பெறும் சேவையினை துவக்க உள்ளது.

<u>(ஆ) புதிய குடும்ப அட்டை பெற விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்:</u>

விண்ணப்பப் படிவத்தில் அதில் கோரப்பட்ட விபரங்களை பூா்த்தி செய்து கீழே குறிப்பிட்ட சான்றுகளுடன் விண்ணப்பதாரரின் கையெப்பம் / இடதுகை பெரு விரல் ரேகை இடப்பட வேண்டும். முழுமையற்ற படிவம் நிராகரிக்கப்படும். பூா்த்தி செய்யப்பட்ட படிவத்துடன் கீழக்காணும் ஆவணங்கள். இணைக்கப்படவேண்டும்.

- தமிழ்நாடடில் மனுதாரா் தற்போது வசிக்கும் விலாசத்திற்கான ஆதாரம் (அசல் ஆவணத்தின் நகல்)
- தோ்தல் வாக்காளா் அட்டை, அல்லது
- சொந்த வீடாக இருப்பின் சொத்து வரி செலுத்தியதற்கான ரசீது(நடப்புஆண்டு) அல்லது
- மின்சார கட்டணபட்டி (கடந்த மாதம்), அல்லது
- தொலைபேசி கட்டணபட்டி (கடந்த மாதம்), அல்லது
- வங்கி சேரிப்பு கணக்கு புத்தகத்தின் முதல், அல்லது
- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டில் வசிப்பவராக இருந்தால் அதன் ஒதுக்கீடு ஆணை, அல்லது
- கடவுச்சீட்டு, அல்லது
- நடப்பில் உள்ள வாடகை ஒப்பந்த பத்திரம் (வாடகை வீடாக இருப்பின்)மற்றும்
- முந்தைய முகவரியில் குடும்ப அட்டை வழங்கப்படடிருப்பின், குடும்ப அட்டை வழங்கு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட ஒப்பளிப்பு சான்று மற்றும் குடும்ப அல்லது முந்தைய குடும்ப அட்டை வழங்கு அதிகாரியிடம் பெறப்பட்ட பெற்றோா் அல்லது பாதுகாப்பாளா் குடும்ப அட்டையிலிருந்து பெயா் நீக்கல் சான்று அல்லது பெயா் சோ்க்கப்படவில்லை என்பதற்கான சான்று அல்லது
- முந்தைய முகவரியில் குடும்ப அட்டை இல்லை எனில் அதற்கான”குடும்ப அட்டை இல்லா”சான்றும் மற்றும்
- முந்தைய குடும்ப அட்டைக்கான விண்ணபத்தின் பதிவு எண் மற்றும் தள்ளுபடிசெய்யப்பட்டதற்கான விவரம் ஏதேனும் இருப்பின் அவை பற்றி விவரம் மற்றும்
- எரிவாயு இணைப்பு ஏதேனும் இருப்பின், இணைப்பு யாருடைய பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் எரிவாயு இணைப்பு முகவா் மற்றும் எண்ணெய் நிறுவனத்தின் பெயா் மற்றும்
- விண்ணப்பதாரருக்கு தனது விண்ணப்பம் குறித்த நிலையினை தெரிவிக்க ஏதுவாக கைபேசி எண் அல்லது மின் அஞ்சல் முகவரியை விண்ணபத்தில் பூா்த்தி செய்யலாம்.(விரைவில் இம்முறை நடைமுறைப்படுத்தப்படும்)
- விண்ணப்பதாரா்கள் தனது விண்ணப்பத்தின் முடிவினை தெரித்து கொள்ள சுய முகவரியிடப்பட்ட தபால் தலையுடன் கூடிய தபால் உறை அல்லது அஞ்சல் அட்டை இணைக்க வேண்டும்.

## இ. குடும்ப அட்டை மனுவினை பரிசீலனை மேற்கொள்ளும் நடைமுறைகள்

- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் தல ஆய்வுக்கு அனுப்பப்படும். தல ஆய்வுக்கு செல்லும் அலுவலர் விண்ணப்பதாரரின் வீட்டை தணிக்கை செய்து மனுதாரர் முகவரியில் வசிப்பதையும் தனியாக சமையல் செயவதையும் மற்றும் எரிவாயு இணைப்பு இருக்கிறதா என்பதையும் ஆய்வு செய்து கொள்வார்.
- மனுதாரரின் வீட்டில் ஆய்வுக்கு வரும் அலுவலரின் அடையாள அட்டையை (அலுவலக அடையாள அட்டை) அவர் ஆய்வை துவக்குவற்கு உட்படும் முன் மனுதாரர் கேட்கலாம். உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அதன் அலுவலர்களின் நேர்மை மற்றும் அவர்கள் கனிவாக நடந்துக்கொள்வதை உறுதி செய்ய விரும்புகிறது. இத்துறை அலுவலர்கள் மற்றும் ஆய்வு அலுவலரின் முறையற்ற நடத்தை மற்றும் கையூட்டு கேட்பு தொடர்பான புகார்களை மனுதாரர், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாக ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை எழிலகம். 4வது மாடி,சேப்பாக்கம், சென்னை
- 600 005 அவர்களுக்கு தயக்கமின்றி தெரிவிக்கலாம். தொலைபேசி எண் 044 – 2859 2255, 2859 2828 நிகரி : 044-28510731 மின்னஞ்சல்: consumer@tn.gov.in )

  மனுதாரர் பூர்த்தி செய்து உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலகத்தில் கொடுத்த புதிய குடும்ப அட்டை மனுக்கள் மீது மனு பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தணிக்கைக்கு வருவார்கள். 30 நாட்களுக்குள் தணிக்கை அலுவலர்கள் வரவில்லை என்றால் உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர்களை தொடர்பு கொண்டு தகவல் கேட்கலாம்.
- அதன்பிறகு சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் / உதவி ஆணையாளர் மேற்ககூறப்பட்ட நிபந்தனைகள்படி விண்ணப்பம் தகுதியுடையதாக இருப்பின்,

  விண்ணப்பம் ஒப்புதல் அளிக்கப்பட்டு குடும்ப அட்டை அச்சடிக்க அனுப்பப்படும்.

## ஈ. தல தணிக்கை முடிவு தொடர்பாக மனுதாரருக்கு தகவல் வழங்கல் நடைமுறை

- (கூடுதல் ஆவணங்கள் அளிக்கப்பட வேண்டியது இருந்தால் தவிர) மனுதாரர் 30 நாட்களுக்கு முன்னதாக உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது இந்த அலுவலகங்களில் தேவையற்ற வேலைப்பளுவை குறைப்பதுடன் நாங்கள் உங்களுக்கு சிறப்பாக பணிபுரிய உதவும்.
- தமிழக அரசு புதிய குடும்ப அட்டை பெறுவதற்கான விண்ணப்பத்தின் பேரில் 60 நாட்களுக்குள் குடும்ப அட்டை வழங்கல் கால நிர்ணயம் செய்துள்ளது.
- விண்ணப்பம் தகுதியுடையதாக இருந்தல், குடும்ப அட்டை அச்சிட அனுப்பப்படும். அச்சிடப்பட்ட குடும்ப உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் பெறப்பட்டவுடன் அலுவலகத்திலிருந்து ஒப்புகைச்சீட்டுடன் 15 தினங்களுக்குள் குடும்ப அட்டை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்து அஞ்சல் அட்டை மனுதாரருக்கு அனுப்பப்படும்.
- ஒரு வேளை, விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலும் உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தை விண்ணப்பித்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மனுதாரருக்கு அஞ்சல் அட்டை முலம் தெரிவிக்கப்படும்.
- விண்ணப்ப படிவத்தில் செல்லிடைபேசி எண் அல்லது எண் குறிப்பிட்டிருந்தால், விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்ட இறுதி முடிவின் நிலையினை உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையிடமிருந்து மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்படும்(விரைவில் இம்முறை செயல்படுத்தபடும்).

## உ.புதிய குடும்ப அட்டை பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம்

- தமிழக அரசு குடும்ப அட்டை பெற ரூ.5/- (ரூபாய் ஐந்து மட்டும்) கட்டணம் நிர்ணயித்துள்ளது. இந்த தொகை சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர்/ வட்ட வழங்கல் அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். மனுதாரர் எவ்வித கையூட்டையும் எந்த ஒரு பணியாளருக்கும் அல்லது சமூக விரோதிகளுக்கும் (இடைதரகர்கள்) கொடுக்க கூடாது என கேட்டுக்கொள்ளபடுகிறார்கள். கையூட்டு கோரும் புகார்கள் இருப்பின் அதனை ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, எழிலகம். 4வது மாடி, சேப்பாக்கம், சென்னை 600 005 அவர்களுக்கு தயக்கமின்றி தெரிவிக்கலாம். (தொலைபேசி எண் 044 – 2859 2255, 2859 2828 நிகரி : 044-28510731 மின்னஞ்சல்: consumer@tn.gov.in )

## ஊ .குடும்ப அட்டையினை பெற்றுக்கொள்ளும் வழிமுறை

சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டை தயராக உள்ளது என்ற தகவலை விண்ணப்பதாரர் பெற்ற. 15 தினங்களுக்குள் நேரடியாக அஞ்சல் அட்டை, சிக்கன சேமிப்பு தகவல் / மின்னஞ்சல் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் / வட்ட வழங்கல் அலுவலரிடம் விண்ணப்பம் சமர்ப்பித்த பொழுது பெற்ற அசல் ஒப்புகை சீட்டினை கொடுத்து குடும்ப அட்டையினை பெற்றுக் கொள்ளலாம்.

- ஒருவேளை அசல் குடும்ப அட்டை தொலைந்து விட்டால், நகல் அட்டை பெற விண்ணப்பிப்பதற்கு ஏதுவாக மனுதாரா் குடும்ப அட்டையின் முதல் பக்கமும் கடைசி பக்கமும் நகல் எடுத்து அல்லது குடும்ப அட்டை எண் கடையின் குறியீடு எண் ஆகியவற்றை பாதுகாப்பாக குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

- ஒருவேளை, குடும்ப தலைவா் குடும்ப அட்டை பெற்றுக் கொள்ள வர இயலவில்லை என்றால் குடும்ப தலைவா் குடுமப உறுப்பினா் ஒருவரிடம் அதிகாரம் அளிப்பு கடிதத்துடன் குடும்ப அட்டை பெற்றக் கொள்ள அனுப்பலாம் குடும்ப அட்டை பெற்றுக் கொள்ள வரும் உறுப்பினரின் கையொப்பத்தினை மனுதாரா் மேலொப்பம் செய்து அங்கீகாரம் அளிப்பு கடிதம் அளிக்க வேண்டும். இவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட நபா் விண்ணப்பம் வழங்கிய பொழுது பெறப்பட்ட அசல் ஒப்புகைச் சீட்டினை சமா்ப்பித்து கடிதம் குடும்ப அட்டையினை பெற்றுக் கொள்ளலாம்.
- உதவி ஆணையாளா் / வட்ட வழங்கல் அலுவலா் அங்கீகாரம் செய்யப்பட்ட நபா் சந்தேகபடும் வகையில் இருப்பின் குடும்ப அட்டை வழங்கவதை மறுக்கலாம்.

உதவி ஆணையாளா் / வட்ட வழங்கல் அலுவலகத்தில் குடும்ப அட்டை வழங்கவதை மறுத்தற்கான காரணத்ததை தெரிவித்து மனுதாரருக்கு அஞ்சல் அட்டை அனுப்பப்டும்.

ஏ. குடும்ப அட்டை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் மனுதாரா் மேல் முறையீடு செய்யும் முறை

- குடும்ப அட்டை பெற 60 தினங்களுக்கு மேலாக தாமதம் ஏற்படின் விண்ணபதாரா் உதவி ஆணையாளா் / வட்ட வழங்கல் அலுவலரை சந்தித்து காலதாமதமான காரணத்தை அறியலாம்.
- விண்ணப்பம் வேண்டுமென்றே தாமதம் செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட பணியாளா் மற்றும் அலுவலா் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
- உதவி ஆணையாளா் / வட்ட வழங்கல் அலுவலா் மனுதாரரின் மேல் முறையீடு தொடா்பாக நடவடிக்கை எடுக்காவிடில் சென்னை நகரம் அல்லது புறநகா் பகுதிகளில் விண்ணபதாரா் துணை ஆணையாளா் (நகரம்)வடக்கு, துணை ஆணையாளா் (நகரம்) தெற்கு அவா்களிடம் முறைடலாம். மாவட்டங்களில் மனுதாரர் சம்பந்தப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்பு அலுவலரை அனுகலாம். புகாா் ஏதேனும் செய்ய விரும்பினால், ஆணையாளா், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்பு துறை எழிலகம். 4வது மாடி, சேப்பாக்கம், சென்னை 600 005 அவா்களுக்கு தயக்கமின்றி தெரிவிக்கலாம்.(தொலைபேசி எண் 044 – 2859 2255, 2859 2828, நிகரி : 044 - 28510731 மின்னஞ்சல்: consumer@tn.gov.in )
- நிராகரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மீது மேல்முறையீடு செய்திட சென்னன நகா் மற்றம் புற நகா் பொறுத்த வரையில் துணை ஆணையாளா் (நகரம்)வடக்கு மற்றும் துணை ஆணையாளா் (நகரம்) தெற்கு, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்பு துறை அவா்களிடம் மேல் முறையீடு செய்யலாம். பிற பகுதிகளில் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல் முறையீடு செய்யலாம்.

**முக்கிய வேண்டும்கோள்**

ஓவ்வொரு குடும்ப அட்டைக்கும் தோராயமாக ஆண்டுக்கு ரூ.2000/- மானிய செலவு ஆகிறது என்பதை விண்ணப்பதாரா் அறிந்து கொள்ள வேண்டும். எனவே குடும்ப உறுப்பினா் பற்றிய தவறான விவரங்கள் மற்றும் தவறான முகவரி அளித்தல் போன்றவை பொது விநியோக திட்ட பொருட்களை கடத்துதலுக்கு வழிகோலும் என்பதால் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாதப் பண்ட சட்டம் பிரிவு 7 ன் கீழ் கண்டனைக்குரியதாகும், இத்தகைய விண்ணப்பதாரா்கள் மீது குற்றிவியல் நடவடிக்கை மற்றும் சட்டப்படி அபராதமும் அதே சமயத்தில் சிறை தண்டனையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே,விண்ணப்பதாரா்கள் தங்களுடன் வசிக்கும் குடும்ப உறுப்பினரின் சரியான விவரங்களை பூா்த்தி செய்ய கேட்டுக்கொள்ளப்படுவதோடு கீழ்காண்பவைகளை தவிா்கக கேட்டுக்கொள்ளப்படுகிறாா்கள். தமிழகத்திலோ அல்லது வேறு எங்குமோ ஏற்கனவே குடும்ப அட்டையில் உள்ள குடும்ப உறுப்பினா்களின் பெயா்களை சோ்த்தால், தவறான முகவரி அளித்தல், எாிவாயு இணைப்பு பற்றிய விவரங்களை மறைத்தல், ஏற்கனவே வேறு முகவரியிலோ அல்லது அதே முகவரியிலோ குடும்ப

3 .அ. நியாய விலைக்கடைகள் செயல்படும் முறை

பொது விநியோக திட்டத்தின் முலம் குடும்ப அட்டைதாரருக்கு வழங்கப்படும் அத்தியாவாசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகிறது. நியாயவிலை கடைகளில் கீழ்காணும் சேவையின் தரம் நிா்ணயிக்கப்பட்டுள்ளது.

- எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் 2கி.மீ தூரத்திற்கு மேல் செல்லாதவாறு கிராமம்/ இடத்தில் நியாய விலைக்கடைகள் அமைக்கப்பட்டுள்ள.

- 1 ½ கி.மீட்டர் தூத்திற்கு மேல் உள்ள இடங்களில் பகுதி நேர நியாய விலைக்கடைகளை துவக்க அரசு இசைந்துள்ளது. முழுநேர நியாய விலைக்கடைகள் அவற்றிற்கென அறிவிக்கப்பட்டுள்ள அரசு விடுமுறை நாட்கள் மற்றும் அரசு நிர்ணயிந்துள்ள வார விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக (நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வால்பாறை பகுதி நீங்கலாக. இப்பகுதிகளிலுள்ள நியாய விலைக்கடைகளுக்கு வெள்ளிக்கிழமை வாராந்திர விடுமுறையாகும்.அனனத்து வேலை நாட்களிலும் திறந்திருக்கும். நியாய விலைக் கடைகளின் அலுவல் நேர விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| சென்னை மற்றும் புறநகா் பகுதிகள(பொதுவாக) | காலை 8.30 மணி பி.ப 12.30 மணி வரை<br>மாலை 3.00 மணி மாலை 7.00 மணி வரை |
| இதரப்பகுதிகள் | காலை 9..00 மணி பி.ப 1.00 மணி வரை<br>மாலை 2.00 மணி மாலை 6.00 மணி வரை |

- விற்பனையாளாகள் அத்தியாவசியப் பொருட்களை மேற்கண்ட பணிநேரத்தில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.
- அத்தியாவசியப் பொருட்களை குடும்ப அட்டைதாரரின் விருப்பத்திற்கேற்ப எத்தனை தவணையிலும் பெறலாம்.
- தினமும் காலையில் ஒவ்வொரு நியாய விலைக்கடை முகப்பிலும். ஒவ்வொரு அத்தியாவசியப் பொருட்களை ஆரம்ப இருப்பு விவரம் இருப்பு பலகையில் வைக்க வேண்டும்.
- நியாய விலைக் கடையின் அறிவிப்பு பலகையில் தினமும் வழங்கப்படும் பொருட்களின் விவரம் எழுதிவைக்கப்பட்ட வேண்டும். ஒவ்வொரு அத்தியாவசியப் பொருட்களின் மாதிரியும் நியாய வலைக் கடையில் மேசையின் மேல் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டும்.
- தரமற்ற பொருட்கள் அல்லது கெட்டுப்போன பொருட்கள் பெறப்பட்டிருந்தால் அவற்றை குடும்ப அட்டைதாரா்களுக்கு விற்பனை செய்யக்கூடாது
- நியாய விலை கடை விறபனையாளா்கள் குடும்ப அட்டைதாரா்களிடம் கனிவுடனும் பொறுமையுடனும், தெளிவாகவும் பதிலளிக்க வேண்டும்.
- குடும்ப அட்டைதாரா்கள் அறிந்து கொள்ள ஏதுவாக, விறபனையாளா் தவிா்க்க இயலாத காரணங்களால் கடையை விடடு செல்லுபோது அடுத்து கடை திறக்கப்படும் நேரம் அறிவிப்பு பலகையில் எழுதி வைத்துவிட்டு செல்ல வேண்டும்.
- பகுதி நேரக் கடையாக இருப்பின், நியாயவிலைகடையின் அறிவிப்பு பலகையில் ஒவ்வொரு வாரமும் கடை திறக்கப்படும் நாள், திறக்கப்படும் நேரம் ஆகிய விவரங்கள் எழுதி வைக்கப்பட வேண்டும்
- குடும்ப அட்டைதாரா்கள் நியாயவிலை கடைகளில் விற்கப்படும் இதர கட்டுபாடற்ற பொருடகளை வாங்க நியாய விலைக்கடை விற்பனையாளா்கள் கட்டாயப்படுத்தக் கூடாது.
- விற்பனையாளா் அத்தியாவசியப் பொருட்களின் தேவைப்பட்டியலை குறிப்பிட்ட காலத்திற்குள் கொடுத்து, நியாயவிலை கடைகளில் இருப்பு இன்மை ஏற்படாதவாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் மின்னனு எடை இயந்திரம் பொறுத்தப்பட்டுள்ளது. விற்பணையாளா்கள் அத்தியாவசியப் பொருட்களை சரியான அளவு நிறுத்தல் செய்து, தவறு மற்றும் எடை குறைவு ஏறபடாதவாறு வழங்குதல் வேண்டும்.
- குடும்ப அட்டைதாரா்கள் வாங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் அளவு மற்றும் தேதியினை குடும்ப அட்டையில் எவ்வித விடுதல் இன்றி விற்பனையாளரால் தெளிவாக பதிவு செய்யப்பட்ட வேண்டும்.
- குடும்ப அட்டைதாரா்கள் எவரையும் தேவையில்லாமல் காத்திருக்க செய்யாமல் அவருக்கு பொருட்களை வழங்கி 30 நிமிடங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

## ஆ. நியாயவிலைக கடைகள் குறைநிவா்த்தி அலுவலா்கள் விவரம்

- உதவி ஆணையாளா் (சென்னை) அல்லது வட்ட வழங்கல் அலுவலா்கள் (செல்லிடைப்பேசி மூலமாகவும் தொடா்பு கொள்ளலாம்)
- அப்பகுதியை சாா்ந்த கூட்டுறவு சாா் பதிவாளா்
- அம்மாவட்டத்தைச் சாா்ந்த துணை ஆணையாளா் (நகரம்) வடக்கு, துணை ஆணையாளா் (நகரம்) தெற்கு / மாவட்ட வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்பு அலுவலா்
- மண்டல மேலாளா் அல்லது பகுதி அலுவலா்கள்,தமிழ்நாடு நுகா்வோா் வாணிபக் கழகம்
- அம்மாவட்டத்தைச் சாா்ந்த இணை பதிவாளா் மற்றும் துணை பதிவாளா் (பொவிதி) அவா்களை அணுக்கலாம்.(மாவட்ட கட்டுப்பாட்டு அறையின் மூலமாக)
- மாவட்ட ஆட்சித்தலைவா்
- ஆணையாளா், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்பு துறை (நேரடி குறைதீா் பதிவு திட்டம் மூலமாக மற்றும் தொலைபேசி எண் 044 – 28510731 மின்னஞ்சல்: consumer@tn.gov.in )

பொது மக்களின் நலன் கருதி அனைத்து பொது விநியோக திட்ட மாவட்ட அலுவலா்களின் கைப்பேசி எண்களும் இணைய தள முகவரி www.consumer.tn.gov.in -ல் தரப்பட்டுள்ளது.

கீழ்காணும் தகவல்களை அறிய உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகா்வோா் பாதுகாப்புத் துறையின் இணைதளமாகிய www.consumer.tn.gov.in – னை பாா்வையிட்டு பயன் பெறலாம்.

- தமிழகத்தில் உள்ள பொது விநியோக திட்ட அதிகாாிகளின் மின்அஞ்சல் முகவாி மற்றும் தொலைபேசி எண்கள்

- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 கீழ் கூறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்
- பொதுவிநியோகத்தின் கீழ் புகார்களை பதிவு செய்தல்
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் கூறப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகள் மீறப்படும் போது அது குறித்து புகார் செய்தல்

**குடும்ப அட்டைதாரர்களின் கடமைகளும், பொறுப்புகளும்:**

1. மனுக்களில் சரியான மற்றும் உண்மையான தகவல்களை அளிக்க வேண்டும் தவறான தகவல்களை அளித்தல் இன்றியமையா பண்டங்கள் சட்டம் 1955ன் பிரிவு 7ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்
2. அட்டை பெறவதற்கு தேவைப்படும் அனைத்து ஆவணங்களையும் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும்
3. பொது விநியோகத்திட்ட பொருட்களை வெளி சந்தையில் விற்பதோ கடத்தல் காரர்களுக்கு விற்பதோ குற்றமாகும். இத்தகைய செயல் இன்றியமையா பண்டங்கள் சட்டம் 1955ன் பிரிவு 7ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. குடும்ப அட்டையினை யாருக்கும் அடமானம் வைப்பதோ அல்லது விற்கவோ கூடாது அவ்வாறு செய்ததாக தெரியவரின் அக்குடும்ப அட்டை உடன் ரத்து செய்யப்படும். மேலும் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.
5. குடும்ப அட்டையின் கீழ் பொருள் வாங்கும் போது அதற்கான ரசீதினை கோரிப் பெற வேண்டும். உங்கள் குடும்ப அட்டையில் அங்கீகாரமில்லாத அல்லது தவறான பதிவுகளை விற்பனையாளர் செய்வதை அனுமதிக்ககூடாது.
6. புதிய குடும்ப அட்டை வாங்கிட விண்ணப்பிக்கும் போதோ அல்லது குடும்ப அட்டையில் ஏதேனும் மாற்றங்களை ஏறப்படுத்த விண்ணப்பிக்கும் போதோ விண்ணப்பம் வழங்கி அதற்கான ஒப்புகைச் சீட்டினை தவறாது பெற்றிட வேண்டும்
7. பொது விநியோகத்திட்ட பொருடகள் கடத்தல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்வது தெரியவரின் உடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புகார் செய்திடவேண்டும் பொது விநியோகத்திட்ட அலுவலர்களின் தொலைபேசி எண்கள் இணையதள முகவரி www.consumer.tn.gov.in-ல் தரப்பட்டுள்ளது. உங்களது மேலான அனுபவங்களை இணையதள முகவரி www.consumer.tn.gov.in/fairprice.htm-ல் பதிவு செய்யும், மாவட்ட அளவில் தங்களது கருத்துக்களை பதிவு செய்திட புகார் பதிவேட்டினை நிர்வாக அலுவலர்/ வட்ட வழங்கல் அலுவலரை தொடர்பு கொள்ளவும். தங்களது கருத்தகளின் அடிப்படையில் உங்களுக்கு சிறப்பான சேவையினை நல்கிட இயலும் என நம்புகிறோம்.